செய்தி வெளியீடு எண் : 974 நாள் : 20.05.2023

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், நில எடுப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள சிக்கல்களால், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், நில உரிமையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்ட விதிமுறைகள் உட்பட அனைத்து வகையிலும் ஆய்வு செய்ய தகுதியான ஒரு சிறப்பு குழுவை அமைத்து, அதன் மூலம் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு விரைவான தீர்வு காண வேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, இன்று (20.05.2023), தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைமை அலுவலகத்தில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தலைமையில், அதிகாரிகள் மற்றும் சட்ட அறிஞர்களை உள்ளடக்கிய சிறப்பு குழு அமைப்பது தொடர்பாகவும், வாரிய அலுவலகங்களில் கோரிக்கை மனு பெட்டிகள் ஜூன் 3ஆம் தேதி முதல் ஜூன் 30ஆம் தேதி வரை மனுக்கள் அளிக்க தயார் நிலையில் வைப்பது தொடர்பாகவும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பூச்சி எஸ். முருகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. எ. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., மற்றும் வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in